## 8. தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

---

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்பு மற்றும் 8.4 இலிருந்து 8.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### பாதீட்டு முரண்

---

11 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 8.4.1 கூட்டிணைந்த திட்டம்

---

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2013 பெப்ரவரி 12 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 8.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 8.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள ஆணைக்குழுவின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 8.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2012 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் பணன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 757(2), 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.6 செயலாற்றல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் 12 க்கு கலந்துரையாடப்படும் வருடத்தில் கீழ்க் காணும் பிரகாரம் 601 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

| | முறைப்பாட்டின் தன்மை | எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை (உதாசீனம்) | 181 |
| (ஆ) | தாக்குதல் | 16 |
| (இ) | துன்புறுத்தல் | 12 |
| (ஈ) | முறையற்ற விதத்தில் ஈடுபடுத்தல் | 143 |
| (உ) | பக்கசார்பு | 106 |
| (ஊ) | சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் | 48 |
| (எ) | பொய்க் குற்றச்சாட்டு/ கைது செய்தல் | 32 |
| (ஏ) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 11 |
| (ஐ) | பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் துன்புறுத்துதல் | 02 |
| (ஒ) | பொலிஸ் தடுப்பில் மரணித்தல் | 02 |
| (ஓ) | ஏனைய (பொலிஸ் உத்தியோகத்தர்களின் முறைப்பாடுகள் உட்பட) | 48 |
| | மொத்தம் | 601 |

மீளாய்வாண்டின் போது அந்த முறைப்பாடுகளுள் 430 அதாவது நூற்றுக்கு 71 வீதம் தீர்க்கப்பட்டுள்ளது. இங்கு தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளென விசாரணைக் கோவைகளை மூடி வைப்பது என பொருள்படும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் என்றால்,

(அ) முறைப்பாட்டாளர்களினால் முறைப்பாடுகள் வாபஸ் பெறுதல்.

(ஆ) முறைப்பாட்டாளர் விசாரணையில் கலந்துகொள்வதற்காக தொடர்ச்சியாக வருகை தராமை.

(இ) விசாரணையின் போது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருதல்.

(ஈ) விசாரணையின் போது பொலிஸ் உரிய முறையில் செயல்பட்டுள்ளதை அறிதல்.

(உ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அறிக்கைகளை கோரும் வேளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறான முறையில் நடந்திருப்பது அறியவந்துள்ளமையினால் பொலிஸினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

(ஊ) பொலிஸ் நடவடிக்கைகள் தாமதமாகும் போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணை காரணமாக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு பொலிஸினாலயே தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.

(எ) குறித்த தரப்பினர்கள் பொலிஸில் சுமுகமான முடிவுக்கு வந்துள்ளதாக விசாரணையின்போது அறியவருதல்.

(ஏ) விசாரணையின் போது முறைப்பாடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயத்திற்கு உரித்தானதல்ல என்பதை அறிதல்.

(ஐ) விசாரணையின்போது முறைப்பாடு நிரூபிக்கப்படுவதற்காக சாட்சிகள் முன்வராமை.

(ஒ) முறைப்பாட்டாளர்கள் ஒரே தடவையில் முறைப்பாட்டை பொலிஸ்மா அதிபர் உட்பட ஏனைய அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ள வேளைகளில் குறித்த அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையின் போது தெரியவருதல்.

**8.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்.**

-------------------------------------

தேசிய பொலிஸ் ஆணைக்குழு பராமரித்து வருகின்ற கட்டிடத்தின் மொத்த பரப்பளவு சதுர அடி 9750 ஆகுவதுடன் அதன் சதுர அடியொன்றுக்காக ரூபா 90 பணம் செலுத்தப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 திகதி நடைபெற்ற 41 ஆவது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிநிலைத் தீர்மானங்களின் படி இந்த அலுவலகத்திற்கு சதுர அடி 3000 - 4000 இற்கு உட்பட்ட அளவிலான அலுவலகக் கட்டிடமொன்று போதுமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அண்ணளவாக சதுர அடியொன்றிற்காக ரூபா 90 வீதம் மேலதிகமான சதுர அடி 5750 அளவுக்காக ரூபா 517,500 பணம் மாதாந்தம் பயனற்ற விதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 8.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 15 | 15 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (இ) | இரண்டாம் நிலை | 33 | 26 | 07 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | மொத்தம் | 64 | 53 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற 13 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலையில் ஒரு உத்தியோகத்தரும் ஆரம்ப நிலையில் இரண்டு உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியிருந்தனர்.